விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 049 வள்ளுவர் ஆண்டு 2054 தை 23 திங்கட்கிழமை (06.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## எழுச்சிப் பேரணி கிளிநொச்சியிலிருந்து ஆரம்பமானது





(கிளிநொச்சி)
வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பல்கலைக்கழக மாணவர்களின் 2வது நாள் பேரணி கிளிநொச்சியிலிருந்து ஆரம்பமானது.
இரணைமடுச் சந்தியிலிருந்து ஆரம்பமான பேரணியில் பரந்தன் சந்தியில் மன்னார் மக்கள் இணைந்து கொண்ட 11

அரசியல் தீர்வு கிடைக்காவிடின்

## தமிழர் தாயகம் பறிபோய்விடும்

90வது பிறந்தநாளில் இரா.சம்பந்தன்



(கொழும்பு)
"அரசியல் தீர்வு ஏற்படாவிட்டால் எங்களுடைய தாயகம் - சரித்திர ரீதியாக எமது தமிழ் 02

லிட்ரோ சமையல்

## எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டது

(கொழும்பு)
லிட்ரோ சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.
இன்று முதல் குறித்த விலை அதிகரிப்பு அமுலாகவுள்ளது.
அதன்படி 12.5 கிலோ எரிவாயு சிலிண் 11

பொருளாதார மீட்சிக்கு

# இந்தியாவின் ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கது

இந்திய உயர்ஸ்தானிகரிடம் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)
பொருளாதார மீட்சிக்காக இந்தியா வழங்கிய ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கது என இந்திய உயர்ஸ்தானிகரிடம் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.
(11ஆம் பக்கம் பார்க்க)



## தாவடியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிள் ஹயஸ் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொரு இளைஞர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
தாவடிப் பகுதியில் நேற்று மாலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.
மருதனார்மடம் பகுதியிலிருந்து 11

## இணுவில் கந்தசுவாமி ஆலய உலகப் பெருமஞ்சத் திருவிழா



11

ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தின்

## அடிமைத்தனத்திலிருந்து பொதுமக்களை விடுவிப்போம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(பாணந்துறை)
ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தின் அடிமைத்தனத்திலிருந்து பொதுமக்களை விடுவிப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
பாணந்துறையில் நேற்று முன்தினம் இடம் 11

## கடும் நெருக்கடியில் நிதியமைச்சு செலவுகளை நிர்வகிக்கின்றது

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான்



(அநுராதபுரம்)
நாட்டில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு, நாட்டுக்குத் தேவையான பணத்தை, நிதி அமைச்சு மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் முகாமைசெய்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். 11

## தேர்தலுக்கான பணம் வழங்குவது கடினம்


அரச சிரேஷ்ட பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான பணத்தை வழங்குவது மிகவும் சிரமமான விடயமென அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.
திறைசேரியிடம் போதிய நிதியின்மையே இதற்கான காரணமென அவர் கூறியுள்ளார். 11

நடுவு நிலை தவறாமல் காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள மானம்பிராய் ஆலயத்தில் வழிபாடு



(யாழ்ப்பாணம்)

அமைச்சர்டக்ளஸ்தேவானந்தாவின் முயற்சியால் நீண்டகாலமாக உயர்பாதுகாப்பு வலயத்தை காரணம் காட்டி பூசை வழிபாடுகள் தடுக்கப்பட்டுவந்த வசாவிளான்மேற்குமானம்பிராய் பிள்ளையார் கோயிலில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள பொதுமக்களுக்கு நேற்று ஞாயிற்றுக் கிழமை முதல் அனுமதி வழங்கப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள குறித்த ஆலயத்துக்கு பக்தர்கள் சென்றுவர ஆரம்பகாலங்களில் அனுமதி கொடுக்கப்பட்டு வந்த போதிலும் பின்னர் பாதுகாப்பு விடயங்களைக் காரணம் காட்டி மறுக்கப்பட்டது.

இந்நிலையில் ஆலய நிர்வாகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து தமது பூர்வீக ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கிணங்க பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொது மக்கள் பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதி பெற்றுக் கொடுத்துள்ளார்.

இதனடிப்படையில் இந்துக்களின் சிறப்பு நாளான தைப்பூச தினமான நேற்று ஆலயத்திற்கு பக்தர்கள் செல்வதற்கு அனுமதிகொடுக்கப்பட்டதற்கு இணங்க தைப்பூச வழிபாடுகள் மற்றும் சிறப்புப் பொங்கல் நிகழ்வுகளைப் பொதுமக்கள் முன்னெடுத்திருந்தனர். (ம-7)

# நல்லூர் கந்தன் ஆலய திருமஞ்சம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் திருமஞ்ச உற்சவம் சிறப்பாக நேற்று இடம்பெற்றது. முருகப் பெருமானுக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று திருமஞ்சத்தில் முருகப்பெருமான் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். (ம-7,33)

## தமிழர் தாயகம்...

மக்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்கள் படிப்படியாக அபகரிக்கப்பட்டு விடும். எனவே, உடனடியாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

சம்பந்தன் நேற்று தனது 90 ஆவது பிறந்தநாளை கொண்டாடியுள்ளார்.

இந்நிலையில், அவரை நேற்றிரவு தொடர்பு கொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் தெரிவிக்கையில்,

**ஊடகவியலாளர்:-** ஐயா! எப்படி இருக்கின்றீர்கள்?

**சம்பந்தன்:-** நான் நலமாக இருக்கின்றேன் தம்பி.

**ஊடகவியலாளர்:-** பிறந்தநாள் வாழ்த்துக்கள் ஐயா.

**சம்பந்தன்:-** நன்றி தம்பி.

**ஊடகவியலாளர்:-** ஐயா! இன்றைய நன்னாளில்தமிழ்மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

**சம்பந்தன்:-** இந்தப் புதிய வருடத்தில் அரசியல் தீர்வு சம்பந்தமான விடயத்தில் நாம் முழு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

அரசியல் தீர்வு தொடர்பான எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கேற்ற வகையில் புதிய அரசமைப்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அதைப் பெறுவதற்கான வாய்ப்பும் இல்லாமல் இல்லை. எல்லோரும் சேர்ந்து அதை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும்.

அரசியல் தீர்வு ஏற்படாவிட்டால் எங்களுடைய தாயகம் - சரித்திர ரீதியாக எமது தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்கள் படிப்படியாக அபகரிக்கப்பட்டு விடும். அதை நாங்கள் அனுமதிக்க முடியாது.

அரசியல் தீர்வு கிடைத்தால் எங்களுடைய பிரதேசங்களின் நிர்வாகங்களை நாங்களே பாரமெடுத்து அவற்றை நடத்தக்கூடிய வழியேற்படும். எனவே, அரசியல் தீர்வு என்பது எங்களுடைய நீண்டகால இலக்கு மாத்திரம் அல்ல எங்களுடைய வாழ்வும் அதில்தான் தங்கியுள்ளது என்றார். (ம-7)

# பாக்.முன்னாள் ஜனாதிபதி முஷாரப் காலமானார்



(டுபாய்)

நீண்டகாலமாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் டுபாயில் காலமானார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

79 வயதான முஷாரப் டுபாயில் உள்ள மருத்துவமனையில் உடல் நலக் குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வந்ததாக பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

1999 இல் அரசாங்கத்தை இராணுவம் கைப்பற்றிய பின்னர் பாகிஸ்தானின் பத்தாவது ஜனாதிபதியான பர்வேஸ் முஷாரப் 1999 முதல் 2002 நவம்பர் வரை பாகிஸ்தானின் தலைமை நிர்வாகியாகவும், ஜூன் 2001 முதல் ஒகஸ்ட் 2008 வரை ஜனாதிபதியாகவும் இருந்தார்.

முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கொலை வழக்கு மற்றும் ரெட் மசூதி மதகுரு கொலை வழக்கில் முஷாரப் தப்பியோடிய நபராக அறிவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் அவர் மார்ச் 2016 முதல் டுபாயில் வசித்து வந்த முஷாரப் 2007 இல் தேசத்துரோக வழக்கை எதிர்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மட்டக்களப்பில் இடம்பெறவுள்ள இறுதிநாள் எதிர்ப்புப் பேரணிக்கு

## வடக்கிலிருந்து பேருந்து ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைகலைக் கழக மாணவர்களின் ஒருங்கிணைப்பில் ஆரம்பமாகியுள்ள சுதந்திரதின எதிர்ப்பு பேரணியின் நிறைவு நாள் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் இடம்பெறவுள்ள நிலையில் குறித்த மக்கள் எழுச்சி பேரணியில் வடக்கு மாகாணத்தில் இருந்து கலந்து கொள்பவர்களுக்குரிய பேருந்து ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் 6 ஆம் திகதிமாலை 6.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இருந்தும் கிளிநொச்சி பரந்தன் பேருந்து நிலையம் மற்றும் கிளிநொச்சி புதிய பேருந்து நிலையத்திலிருந்தும், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் பேருந்து நிலையங்களிலிருந்தும் செல்லவுள்ளன.

அந்தந்த மாவட்டங்களில் இருந்து செல்லவுள்ளோர் மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு சென்று பேருந்தில் தங்களது பயணத்தை தொடர முடியும் மேலதிக விபரங்களுக்கு 077 481 9490 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் அ.விஜயகுமார் தெரிவித்துள்ளார். (ம-7,33)

# சாவகச்சேரியில் சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்ட

## ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மதுவரி திணைக்களத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்த நபரை யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.



பௌர்ணமி தினமான நேற்றையதினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மதுவரி திணைக்கள அலுவலகத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் சட்டவிரோதமான முறையில் நபர் ஒருவர் மதுபான விற்பனையில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டை பொலிஸார் முற்றுகையிட்டு சோதனை நடத்தினர்.

அதன் போது வீட்டில் இருந்து பியர் மற்றும் சாராயம் என்பன பொலிஸாரினால் மீட்கப்பட்டதுடன் அங்கிருந்த நபரை மது பானம் விற்பனை செய்த குற்றத்தில் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரையும், மீட்கப்பட்ட மது பானங்களையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ம-7,33)


ஓம் நமசிவாய

துன்பங்கள் விலக தொடர்ந்து ஓதுவோம் திருவாசகம்



நாடும், வீடும் நலம் பெறவேண்டி எதிர்வரும் ஏழாந் திகதி செவ்வாய்க்கிழமை அன்று மகநட்சத்திர நாளில் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தான் திருத்திண்ணபுரத் தலத்தில் இந் நிகழ்வு நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

இத் திருவாசக முற்றோதல் நிகழ்வில் பெருந்திரளாகக் கலந்து கொண்டு துன்பங்கள் எல்லாம் நீங்கி நிம்மதியான வாழ்வு சித்திக்க பிரார்த்திக்கத் திரண்டு வாரீர். முற்றோதல் நிறைவில் மாணிக்கவாசகர் மடாலயத்தில் மாகேஸ்வர பூஜையும் இடம்பெறும். அனைவரும் வருக பிரார்த்தனை செய்வோம்.

ஓம் நமசிவாய

க.கு.க.சிவபாலன்
திருத்திண்ணபுரச் சிவ அடியார்

(C-5909)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பத்தாயிரம் தமிழர்களின் இழப்பிற்கான காரணம் தீர்க்கப்படாமல் உள்ளது

## பிரிட்டன் அனைத்து கட்சி பாராளுமன்ற குழு

(லண்டன்)

**75 வருடகால வரலாற்றில் சுமார் பத்தாயிரம் தமிழர்களின் இழப்பிற்கு அடிப்படைக் காரணம் இன்னமும் தீர்க்கப்படாமலேயே இருக்கிறது என தமிழர்களுக்கான பிரிட்டன் அனைத்துக் கட்சி பாராளுமன்ற குழு சுட்டிக்காட்டியுள்ளது.**

ஆகவே தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நிலையான அரசியல் தீர்வொன்றை இலங்கை கண்டடைவதை உறுதி செய்ய வேண்டும் என பிரிட்டன் அரசாங்கத்திடமும் சர்வதேச சமூகத்திடமும் அக்குழு வலியுறுத்தியுள்ளது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு, பிரிட்டன் வாழ் தமிழர்களை உள்ளடக்கிய தமிழர்களுக்கான பிரிட்டன் அனைத்துக் கட்சி பாராளுமன்ற குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இராணுவமயமாக்கல், போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை என்பன தொடர்பில் நீதி, பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாமை மற்றும் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அரசியல் தீர்வினை அடைவதில் ஏற்பட்டுள்ள தோல்வியை முன்னிறுத்தி தமிழர்கள் ஆதீனத்தை புறக்கணித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்கனவே வலிந்து காணாமலாக்கப்படல் தொடர்பான சம்பவங்கள், காணி அபகரிப்பு மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் இன்னமும் தொடர்வதாகவும் அக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நியர்யமான ஆட்சி நிர்வாகத்தை உறுதிப்படுத்தி ஸ்திரத்தன்மை மற்றும் சுபீட்சத்தை நோக்கிய பாதையில் நாட்டை முன்நகர்த்திச் செல்லக்கூடியவாறாக இலங்கையின் அரசகட்டமைப்பு மாற்றமடைய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (4-6)

# அடுத்த தவணைக்கு முன் 34 ஆயிரம் ஆசிரியர்கள் நியமனம்

## கல்வி அமைச்சு

(கொழும்பு)

அடுத்த தவணைக்காக மார்ச் மாதம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், 26,000 புதிய பட்டதாரி ஆசிரியர்களையும் 8,000 விஞ்ஞான கல்லூரி ஆசிரியர்களையும் இணைத்துக்கொள்ள உள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.



பிரதமரின் செயலாளர் தலைமையிலான அமைச்சரவை மீளாய்வுக் குழுவொன்றில் அமைச்சர் பிரேமஜயந்த இந்த திட்டத்திற்கான விசேட அனுமதியைப் பெற்றிருந்தார்.

அதன்படி 40 வயதுக்குட்பட்ட பட்டதாரிகள் ஆசிரியர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என்றும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க பெப்ரவரி 10 வரை அவகாசம் உள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் 12,000 ஆசிரியர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து வெற்றிடமாக உள்ள ஆசிரியர் பதவிகளுக்கு, தேசிய பாடசாலைகளில் புதிதாக 4,000 பட்டதாரி ஆசிரியர்களையும் மீதமுள்ளவர்களை மாகாண பாடசாலைகளுக்கும் ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் ஆசிரியர்கள் அதிகமாக இருந்தாலும் மேல் மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் தமிழ் ஆசிரியர் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றன. தமிழ் ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ள பகுதிகளில் இவர்களை நியமிக்க கல்வி அமைச்சு எதிர்பார்க்கிறது. (4-6)

# பல்கலைக்கழக வெற்றிடங்கள் 15 இற்கு முன்னர் பூர்த்தி

(கொழும்பு)

இந்த கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக வெற்றிடங்கள் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உயர்தர மீள் மதிப்பீட்டு முடிவுகளின் பின்னர், பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்பங்களும் அங்கு பரிசீலிக்கப்படும் என அதன் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

புதிய கல்வியாண்டுக்கான மருத்துவ பீடங்கள் உட்பட பல பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார். (4-6)

# பொலிஸாரின் தேர்தல் செலவு; தேர்தல்கள் ஆணைக்குழு அதிர்ச்சி

(கொழும்பு)

2018 உள்ளூராட்சித் தேர்தலை விட மூன்று மடங்கு செலவோடு தேர்தலை நடத்துவதற்கு உதவுவதற்காக பொலிஸ் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு திறைசேரியிடம் ஆட்சேபனைகளை முன்வைக்கவுள்ளது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தலுக்கான கோரிக்கைக்கு மாறாக மார்ச் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கு சேவைகளை வழங்குவதற்கு 2.8 பில்லியன் ரூபாய் தேவை என பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.


கொடுப்பனவுகள், எரிபொருள் செலவுகள், வாகன வாடகை, தொலைபேசி, தகவல் தொடர்பு பொருட்கள், எழுது பொருட்கள் மற்றும் இதர செலவுகளை உள்ளடக்கிய மதிப்பிடப்பட்ட செலவுகள் ஆறு மடங்கு அதிகரிப்பைக் காட்டியுள்ளதாக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்ட மதிப்பீடுகளை விட பொலிஸ் திணைக்களம் அனுப்பிய மதிப்பீடுகள் மிக அதிகமாக உள்ளது என்றும் செலவுகளுக்காக உரிய பத்திரங்களை வழங்கினால் மட்டுமே பணம் செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். (4-6)

# தமிழர்களுக்கான தீர்வு ஜே.வி.பி அரசில் கிடைக்கும்

## டில்வின் சில்வா

(கொழும்பு)



13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பான விவாதத்தைப் பயன்படுத்தி பிரதான அரசியல் கட்சிகள் இனவாதத்தை தூண்டிவிடுவதாக ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளது.

ஊடக சந்திப்பில் பேசிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா இவ்வாறான கருத்துக்கள் ஒரு பொறி என்றும் இதற்கு மக்கள் பலியாகக் கூடாது என்றும் கோரியுள்ளார்.

13 ஆவது திருத்தம் குறித்து ஜனாதிபதி குறிப்பிட்ட அந்தத் தருணம் வரை இந்த நாட்டில் எவரும் இந்தத் திருத்தம் பற்றிக் கவலைப்பட்டதில்லை என்றும் டில்வின் சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்கிலும் தெற்கிலும் உள்ள மக்கள் தாங்க முடியாத வாழ்க்கைச் செலவு மற்றும் விலைவாசி உயர்வை மட்டுமே பேசிக்கொண்டிருந்தனர் என்றும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தமது அரசாங்கம் அமைக்கப்பட்டால், தீர்வு பொறிமுறையுடன் கூடிய புதிய அரசியலமைப்பை கொண்டு வந்து தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வுகளை வழங்குவோம் என்றும் உறுதியளித்துள்ளார். (4-6)

# அரசியலமைப்பு சபை இன்று கூடுகிறது

(கொழும்பு)

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அரசியலமைப்பு பேரவை இன்று பிற்பகல் 3 மணிக்கு கூடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 25 ஆம் திகதி முதல் முறையாக கூடிய அரசியலமைப்பு சபை ஜனவரி 30 ஆம் திகதி மீண்டும் கூடியது.

ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை நியமிக்கும் முறை குறித்து ஆலோசிக்கப்பட்டதுடன், அதற்கான விண்ணப்பங்களை வரவேற்கவும் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை ஆணைக்குழு உறுப்பினர்கள் விண்ணப்பங்களை அனுப்ப அவகாசம் உள்ளது.

ஏற்கனவே வெற்றிடமாக உள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கான புதிய நியமனங்கள் தொடர்பில் இன்று கூடவுள்ள அரசியலமைப்பு சபையின் கவனம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (4-6)




வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய எழுச்சிப் பேரணியின் நேற்றைய பதிவுகள்.

(படங்கள்:-தேவானந்தன், சப்தசங்கரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளை புறக்கணிக்க 40 நாடுகள் தயார்!



2024 ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெறும் ஒலிம்பிக்கை 40 நாடுகள் வரை புறக்கணிக்கலாம் என போலந்தின் விளையாட்டு மற்றும் சுற்றுலா அமைச்சர் கமில் போர்ட்னிசுக் எச்சரித்துள்ளார்.

இதனால், உலகின் மிகப் பெரிய விளையாட்டுத் தொடரான ஒலிம்பிக் அர்த்தமற்றதாக ஆகிவிடுமென அவர் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்திற்கு முன்னர் சர்வதேச ஒலிம்பிக் ஆணையத்தின் திட்டங்களைத் தடுப்பதற்கு ஆதரவளிக்க பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் கனடா உள்ளிட்ட 40 நாடுகளின் கூட்டணியை உருவாக்க முடியும் என்று தான் நம்புவதாக அவர் மேலும் கூறினார்.

பாரிஸ் ஒலிம்பிக்கில் ரஷ்யர்களையும் பெலாரசியர்களையும் போட்டியிட அனுமதிக்கும் சர்வதேச ஒலிம்பிக் ஆணையத்தின் முடிவிற்கு பிறகு போலந்து, லிதுவேனியா, எஸ்டோனியா மற்றும் லாட்வியா ஆகிய நாடுகள் இந்த முடிவினை எடுத்துள்ளன.

முன்னதாகவே ரஷ்ய மற்றும் பெலாரஷ்ய விளையாட்டு வீரர்கள் போட்டியிட அனுமதித்தால் 2024 பாரிஸ் தொடரை புறக்கணிப்பதாக உக்ரைன் மிரட்டல் விடுத்தது.

ஆனால், எந்தவொரு புறக்கணிப்பும் விளையாட்டு வீரர்களை மட்டுமே தண்டிக்கும் என சர்வதேச ஒலிம்பிக் ஆணையம் கூறியுள்ளது. (4)

# மகளிர் கிரிக்கெட்டின் ஆலோசகராக சுசந்திகா



இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் ஆலோசகராக ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற சுசந்திகா ஜெயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் கடந்த புதன்கிழமை நியமிக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை மகளிர் கிரிக்கெட்டை மேம்படுத்தும் நோக்கில் அவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக இல ங்கை கிரிக்கெட் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (4)

# ஆசிய கிண்ணத் தொடரில் விளையாட இந்திய அணி பாகிஸ்தான் செல்லாது

## பி.சி.சி.ஐ திட்டவட்டம்

ஆசியக் கிண்ணத் தொட ரில் விளையாட இந்திய அணி பாகிஸ்தான் பயணிக்காது என்பதில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை உறுதியாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் பாகிஸ்தானில் நடைபெறுவதாக திட்டமிடப்பட்டிருந்த கிண்ணத்தொடரை பொதுவான திடலில் நடத்த வேண்டும் என இந்தியா தரப்பில் கூறப்பட்டுவந்த நிலையில், இந்தத் தகவல் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆசியக் கிண்ணத் தொடரை எங்கே நடத்துவது என்பது குறித்து முடிவு செய்ய, பஹ்ரைனில் நடக்கும் ஆசிய கிரிக்கெட் சபை கூட்டத்திற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலாளரும் ஆசிய கிரிக்கெட் சபையின் (ஏசிசி) தலைவருமான ஜெய் ஷா சென்றுள்ளனர்.

இந்தக் கூட்டத்தின் முடிவில் இதுகுறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (4)




**நந்தனா**




**கிருத்திகா**




**நிவேதிதன்**




**தயாளன்**




**கபிலா**




**யுவதேஷ்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை சூத்திரத்திற்கு அமைய பெற்றோல் விலை அதிகரிக்கப்படவில்லை

## சம்பிக்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் பெற்றோல் விலையில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பானது எந்தவொரு விலைச் சூத்திரத்தின் பிரகாரமும் மேற்கொள்ளப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தங்களின் விருப்பத்திற்கமைய இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

துறைமுகத்தில் இருந்து இறக்கப்படும் ஒரு லீற்றர் பெற்றோல் விலை 200 ரூபாவாகும் எனவும் உலக சந்தையில் எண்ணெய் விலை குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோலுக்கு பாரிய வரி விதிக்கப்பட்டுள்ளமையால் 200 ரூபாய் பெற்றோல் லீற்றருக்கு மேலும் 200 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-6)

# வயோதிபர்களின் சனத்தொகை 2030 இல் அதிகரிக்கும்

(கொழும்பு)

2030 ஆம் ஆண்டளவில் இலங்கையில் வயோதிபர்களின் சனத்தொகை 21% ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக முதியோர்களுக்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.

இலங்கையின் வயோதிபர் எண்ணிக்கை, மொத்த சனத்தொகையில் 14.6% என்ற அளவில் உள்ளது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முதியோர்களுக்கான தேசிய சபையின், 2020 ஆம் ஆண்டு அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், 2020 ஆம் ஆண்டில் அந்த சபை வழங்கிய வயது வயோதிபர் அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 62,279 ஆகும். (4-6)

# 6 நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடைந்தன



(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு கொண்டுவரப்படவிருந்த ஏழு நிலக்கரி கப்பல்களில் 6 கப்பல்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், தற்போது நிலவும் மின்வெட்டுகளின் கீழ் பெப்ரவரி மாதம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நுரைச்சோலை அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரி இருப்பு போதுமானது என அதன் தலைவர் ஷெஹான் சுமனசேகர தெரிவித்தார். (4-6)

# இலங்கையர்களின் கண் தானத்தால் 87 ஆயிரம் வெளிநாட்டவர்களுக்கு பார்வை

(கொழும்பு)

இலங்கைப் பிரஜைகள் செய்த கண் தானம் காரணமாக 87,870 வெளிநாட்டவர்கள் பார்வையை பெற்றுக்கொண்டுள்ளனர் என இலங்கை கண் தான சங்கத்தின் சர்வதேச கண் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் ஜகத் சமன் மாதரராச்சி தெரிவித்துள்ளார்.

அத்துடன் தானம் செய்யப்பட்ட கண்களைக் கொண்டு இலங்கையைச் சேர்ந்த 58,260 பேர் பார்வையை பெற்றுக் கொண்டுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த 21 இலட்சம் பேர் சுய விருப்பின் அடிப்படையில் கண் தானம் செய்யும் உறுதிமொழியை வழங்கியுள்ளனர்.

உயிரிழந்து குறிப்பிட்ட சில மணித்தியாலங்களில் கண்களை தானமாக பெற்றுக் கொள்ள கண் தான சங்கத்தின் கிளைகள் நாடு முழுவதும் இயங்கி வருகின்றன.

கண் தானம் இலவசமாக மேற்கொள்ளப்பட்டாலும் கண்களை பாதுகாத்து வைத்துக் கொள்ள 30,000 முதல் 40,000 ரூபாய் வரையில் செலவாகின்றது.

வெளிநாடுகளுக்கு கண்களை வழங்கும் போது 50,000 முதல் 80,000 ரூபாய் வரையில் செலவிடப்படுகிறது. இதே வேளை கடந்த ஆண்டு அதிக எண்ணிக்கையில் கண்கள் தானம் செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

# இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு பேருந்துகள்



(கொழும்பு)

இலங்கையின் கிராமப்புறங்களில் பொதுப் போக்குவரத்து சேவையை வலுப்படுத்த இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு 50 பேருந்துகள் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இதற்கான ஆவணங்களை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே, ஜனாதிபதியிடம் கையளித்திருந்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இந்திய அரசாங்கத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, 75 ஆவது தேசிய சுதந்திர கொண்டாட்டத்துடன் இணைந்ததாக, இந்தப் பேருந்துகளை வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (4)

# பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு உறுப்பினர் ஒருவர் நியமனம்

(கொழும்பு)

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக டக்ளஸ் என். நாணயக்கார திறைசேரி செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவர். இராஜினாமா செய்திருந்த நிலையில் குறித்த இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-6)

# இராசிபலன்

06.02.2023
தை 23, திங்கட்கிழமை
பிரதமை பின்னிரவு 2.39 மணிவரை

ஆயிலியம் பிற்பகல் 3.36 மணிவரை
சுபநேரம் 12.35-02.05 மணிவரை
இராகுகாலம் 8.05-9.35 மணிவரை

சந்திராஷ்டமம்
உத்தராடம், திருவோணம்

வளவன்




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் மேலோங்கும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.




தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் வந்து சேரலாம்.




நண்பர்கள் ஒழிவு மறைவின்றி பழகுவார்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.





சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்களால் பலனுண்டு.




சிலர் பாராட்டுவது போல் உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல் நலனில் கவனம் தேவை, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.




இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

எல்லோரையும் நம்பிவிடாதே ஏமாற்ற பலர் இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மத்திய கல்லூரியின் முன்னை நாள் அதிபர் அமரர். இளையதம்பி சபாலிங்கம் ஞாபகார்த்தமாக அவரது மகன் ஜெயலிங்கத்தால் புனர்நிர்மானிக்கப்பட்ட சபாலிங்கம் மண்டபத் திறப்பு விழா கடந்த ஜனவரி 19 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி அதிபர் சி.க.எழில்வேந்தன் தலைமையில் இடம்பெற்றது.

# நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒத்துழைப்பு வழங்க தயார்

## பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம்

**(கொழும்பு)**

**இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அவசியமான அனைத்துவித ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராக இருப்பதாக பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பற்றீஸியா ஸ்கொட்லண்ட் உறுதியளித்துள்ளார்.**



அரசாங்கத்தின் அழைப்பையேற்று சுதந்திரதின நிகழ்வில் பங்கேற்பதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பற்றீஸியா ஸ்கொட்லண்ட், கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது.

உலகளாவிய ரீதியில் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, எரிபொருள் பற்றாக்குறை மற்றும் காலநிலை மாற்றம் போன்றவற்றின் அழுத்தங்களால் இலங்கை மாத்திரமன்றி மேலும் பல நாடுகள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றன என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், எனவே 56 உறுப்பு நாடுகளைக்கொண்ட பொதுநலவாய அமைப்பானது, நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் உறுப்பு நாடுகளின் மீட்சிக்கு அவசியமான ஆதரவை வழங்கும் நோக்கில் ஒன்றிணைந்து செயலாற்றி வருகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான அழுத்தங்களினால் ஏற்பட்ட சுமையை இலங்கை தொடர்ந்து உணர்கின்றது என்பதை நான் அறிவேன்.

சுமையைத் தாங்குவதென்பது மிகவும் கடினமானதாகவும் அச்சுறுத்தக்கூடியதாகவும் இருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ள பற்றீஸியா ஸ்கொட்லண்ட், இருப்பினும் “இந்த சவால்களுக்கு நீங்கள் தனித்து முகங்கொடுக்கவில்லை” என்பதை அனைத்து இலங்கையர்களுக்கும் தெரியப்படுத்துவதற்காகவே நான் இங்கு வந்திருக்கின்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளார். (4)

# புலமை பரிசில் பரீட்சை பெறுபேறுகள்-2022

**நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.வித்தியாலயம்**

சி.லக்ஷன்-180, ச.போல் றொபின்சன்-175, ப.கபிஷாந்-169, தோ.மரிய அபிஷானி-169, யோ.திவிஷன்-168, சு.டிஷானி-167, ரா.உதேஷ்ணா-167, வி.விஷான்-165, து.டிலுஷா-165, ஸொ.அபக்ஷன்-165, த.விதுனா-163, ஜெ.மதுராங்கன்-160, ஸ்.வைஸ்ணவி-159, கி.தட்ஷிகன்-158, தி.தனிஸ்-156, ஜீ.தானிகா-156, ச.ஆருஷன்-155, கு.சஞ்சாயா-154, ச.லக்ஸ்மிதன்-154, பு.துலக்சிகா-154, றொ.கபோறின்யா-154, ந.அப்ஷரா-154, செ.கம்ஷாலன்-153, க.கெனானி-152, பி.பகீஷன்-151, த.கனீபர்-151, கோ.சதுர்ஷிகா-150, பா.ஜஸ்மிகா-150, ரா.பிரதீஷா-148, வ.ஆரோன்-148, சு.சஜீவ்-148, ஜெ.ஜெறோமியா-147, நி. நிஷ்மிகா-147, ற.றக்சின்-145, கா.பவிஷ்னா-145, ஜெ.சதுர்ஜிகன்-144, நா.கீர்த்திகா-144, வி.மேரி ஏஞ்சலின்-143, உ. அகிலேஷ்-143.



பூமாலை கட்டுவது எப்படி என்ற தலைப்பில் பயிலரங்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (படம்- சிவசாந்தன்)

# யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் 8 மணிவரை நடைபெறும்.

இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும். சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்பட விருக்கின்றன.

பயிலவிரும்புவோர் வட மாகாண கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத் தளத்திலோ விண்ணப்பப்படிவங்களை பெற்று எதிர்வரும் 10 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கல்வி அமைச்சு வட மாகாணம், இளைஞர் விவகார அலகு, செம் மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

# ஒற்றையாட்சிக்குள் தீர்வு ஏற்றுக்கொள்ள முடியாது

## கஜேந்திரகுமார் எம்.பி

(அராலி)

ஒற்றையாட்சியின் 13 ஆவது திருத்தத்தினை ஒரு தீர்வாக ஏற்கவோ தீர்வுடைய ஆரம்ப புள்ளியாக கருதுவதற்கு தயாராக இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழில் இடம்பெற்ற கறுப்பு தின போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள தேசத்தில் தங்களுடைய மக்களே ஒரு கரிநாள் அனுஷ்டிக்கின்ற நிலையிலே தங்களாலே நிராகிக்கப்பட்ட தலைவர் ஜனாதிபதி என பதவியினை வைத்துக் கொண்டு தேர்தலில் போட்டி [illegible] வெல்லமுடியாத நிலையில் உள்ளார். பொருளாதார ரீதியாக நாடு அழிந்து போன நிலையில் அந்த பதவியை வைத்து பல நிகழ்வினை செய்துகொண்டு இருக்கின்றார்.

சிங்கள தரப்புக்கள் கூறுவது போல தமிழர்களின் அபிலாசைகளுக்கு தமிழ்தேசம் எந்தொரு சந்தர்ப்பத்திலும் ஒற்றையாட்சி 13 ஆவது திருத்தத்தினை ஒரு தீர்வாக ஏற்கவோ, தீர்வுடைய ஆரம்ப புள்ளியாக கருதுவதற்கு தயாராக இல்லை என தெரிவித்தார். (4-6-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துக் கணிப்பு பட்டியலில் முதலிடம் பிடித்த மோடி



(வோஷிங்டன்)

உலகின் முன்னணி கருத்துக் கணிப்பு நிறுவனமான "மோர்னிங் கன்சல்ட்" நிறுவனம் அமெரிக்காவின் வோஷிங்டனை தலைமையிடமாகக் கொண்டு செயற்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை உலகின் மிக முக்கியமான 22 நாடுகளின் தலைவர்கள் குறித்து அந்த நாடுகளின் மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தி தரவரிசை பட்டியலை "மோர்னிங் கன்சல்ட்" வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி முதலிடம் பெற்றுள்ளார்.

இந்தியாவில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் 78 சதவீதம் மக்கள் பிரதமர் மோடிக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

குறித்த கருத்து கணிப்பில் மெக்சிக்கோ ஜனாதிபதி லோபஸ் ஒபரடோர் 68 சதவீதவாக்குகளுடனும், சுவிட்சர்லாந்து ஜனாதிபதி ஆலைன் பெர்செட் 62 சதவீத வாக்குகளுடன் இரண்டாம் மூன்றாம் இடங்களை பிடித்துள்ளனர். (4)

# நைஜீரியாவில் ஆயுதமேந்திய கும்பலுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல்

## 40 இற்கு மேற்பட்டோர் உயிரிழப்பு

(அபுஜா)

நைஜீரியாவின் வடக்கு கட்சினா மாநிலத்தில், பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களுக்கு முன்னதாக நடந்த சமீபத்திய வன்முறையில் துப்பாக்கி ஏந்தியவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நடந்த மோதலில் 40 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.


உள்நாட்டில் கொள்ளைக்காரர்கள் என்று அழைக்கப்படும் ஆயுதமேந்திய கும்பல், கட்சினா எனும் ஒரு கிராமத்தைத் தாக்கியதாக, கட்சினா மாநில பொலிஸ்துறை செய்தித் தொடர்பாளர் காம்போ இசா தெரிவித்தார்.

குற்றவாளிகளை சட்டத்தின் முன் கொண்டு வரும் நோக்கில் தற்போது ஒரு கூட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் நடந்து வருவதாக அவர் மேலும் கூறினார்.

ஆயுதமேந்திய கும்பல்களால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள வட மாநிலங்களில் கட்சினாவும் ஒன்றாகும்.

புதிய பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு பெப்ரவரி 25 ஆம் திகதி மக்கள் தேர்தலை எதிர்கொள்ளவுள்ள நிலையில், இந்த சம்பவம் நடந்துள்ளது. (4)

# சிலியில் காட்டுத் தீ 22 பேர் இதுவரை பலி



(சாண்டியாகோ)

சிலி நாட்டில் கடும் வெப்பம் நிலவி வருகிறது. இதன் காரணமாக வெப்பக்காற்றுகள் வீசி காட்டுத்தீ ஏற்பட்டு வருகிறது. நாடு முழுவதும் வெப்பக்காற்று காரணமாக 150 இற்கும் மேற்பட்ட இடங்களில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது.

காட்டுத்தீயை அணைக்க தீயணைப்பு துறையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மொத்தம் 34 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் காட்டுத்தீ பரவி உள்ளதாகவும் இதுவரை 65 காட்டுத்தீ சம்பவங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், சிலியில் காட்டுத்தீயில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளது..

மேலும், 500 இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 16 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர். (4)

# ரஷ்யாவின் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஆதாரங்கள் உள்ளன

## ஜேர்மனி அறிவிப்பு



(பேர்லின்)

உக்ரைனில் போர்க்குற்றங்கள் நடந்தமைக்கான ஆதாரங்கள் ஜேர்மனியிடம் உள்ளதாக அந்நாட்டின் அரசு துறை வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.


இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பீட்டர் ஃபிராங்க், உக்ரைனில் நடத்தப்பட்ட கொலைகள், உட்கட்டமைப்பு மீதான தாக்குதல்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மூன்று இலக்க வரம்பில் ஆதாரங்கள் உள்ளதாக தெரிவித்த அவர், உக்ரைன் மீது படையெடுப்பை தொடங்கிய உடனேயே, கீவ் மீது ரஷ்ய படைகள் அட்டூழியங்களைச் செய்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

ஜேர்மனி, போர்க்குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை கடந்த 2022 ஆண்டு மார்ச் மாதத்தில் சேகரிக்க தொடங்கியது.

போர்க் குற்றத்தை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் பிராங்க் வலியுறுத்தினார். (4)

# சீனாவின் உளவு பலூனை சுட்டு வீழ்த்தியது அமெரிக்கா



(வொஷிங்டன்)

அமெரிக்கா முழுவதும் உள்ள முக்கிய இராணுவ தளங்களை உளவு பார்த்ததாக கூறப்படும் சீன பலூனை சுட்டு வீழ்த்தியுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

பூமியில் விழும் குப்பைகளிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் வகையில் அமெரிக்க கடல் எல்லையில் பலூனை வீழ்த்தியதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இது உளவு பார்க்கும் விமானம் அல்ல என மறுத்துள்ள சீன அதிகாரிகள் கடும் அதிருப்தியையும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்கக் கண்டத்தில் உள்ள மூலோபாய தளங்களைக் கண்காணிக்கும் முயற்சியில் சீனா, இந்த பலூன்களை அனுப்பி வருவதாக அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் குற்றம் சாட்டியுள்ளார்.

சர்வதேச சட்டத்தை மீறும் சீனாவின் நடவடிக்கைகள் மற்றும் நாடுகளின் இறையாண்மையை மீறும் நடவடிக்கைகளை பொறுத்துக்கொள்ள கூடாது என தாய்வான் தெரிவித்துள்ளது.

இதேவேளை அமெரிக்க கண்டத்தின் பாதுகாப்பு அவசியம் என்றும் இதற்காக ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். (4-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: சூரி 1 செவ் 3 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: தபாலக ஊழியர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10431 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: சூரி , செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்<br>தொ.இ:G/11544 |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா:13 ½ சூரி.செவ் 10 இல்<br>உயரம் :167 cm<br>தகைமை/தொழில்:A/L(பாடசாலை அலுவலக ஊழியர்)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் மட்டும்<br>தொ.இ: B/10441 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 40 சூரி , செவ் 3 இல்<br>உயரம்:4'11"<br>தகைமை/தொழில்:HNDA,DO<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார் தொழில்<br>தொ.இ:G/11545 |
| பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: சூரி 8 செவ் 4 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்:பட்டதாரி ரெலிக்கோம் Engineer<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/10445 | பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்:மூலம் 4<br>கி.பா: 33 சூரி 10 செவ் 6 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்:BSc,MSc(அவுஸ்திரேலியா)<br>எதிர்பார்ப்பு:அவுஸ்திரேலியா மட்டும்<br>தொ.இ: G/11547 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: சூரி 12 செவ்.10 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L கடை (தனியார்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/10449 | பிறப்பு: 1989 கிறிஸ்தவம் RC<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா: சூரி 8 செவ் 11 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/11554 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 95





யாழ், குழல், முழவு, தண்
ணுமை முதலிய கருவிகளின்
ஒலியுடன் சதங்கைச் சத்தமும்
சேர்ந்து ஒலிக்கின்றன. இங்கே
ஆடுகிறவர்கள் கடம்பூர் சம்பு
வரையர் மாளிகையில் ஆடியவர்
களைப் போல் குரவைக் கூத்தர்கள்
அல்ல.

ஆகா! இங்கே கேட்பது பண்
பட்ட இனிய கானம். கலைச் சிறப்பு
வாய்ந்த பரதநாட்டியம் ஆடுவோ
ரின் சதங்கை ஒலி. அதோ, ஆட்டி
வைக்கும் நடன ஆசிரியர்கள்
கையில் பிடித்த கோலின் சத்தம்
கூடச் சேர்ந்து வருகிறதே.

"கோலோடக் கோல்வளையார்
கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழை
யார் நடமாடுந் திருவையாறே!

ஆகா! சம்பந்த சுவாமிகள் சிறந்த
சிவபக்தர் அதைக் காட்டிலும் சிறந்த
ரசிகர். அவர் அன்றைக்கு வர்
ணனை செய்தபடியே இன்றைக்கும்
இந்தத் திருவையாறு விளங்குகி
றதே. இப்பிப்பட்ட ஊரில் ஒருநாள்
தங்கி ஆடல், பாடல் விநோதங்
களைப் பார்த்துவிட்டு, ஐயாறப்பரை
யும் அறம் வளர்த்த நாயகி அம்ம
னையும் தரிசித்து விட்டுத்தான் போக
வேண்டும். அடடா, காவேரியின்
கரையில் எத்தனை பக்தர்கள்
உட்கார்ந்து அனுஷ்டானம் செய்கி
றார்கள்? பட்டை பட்டையாக அவர்
கள் திருநீறு அணிந்திருப்பது எவ்வ
ளவு களையாயிருக்கிறது? சில
சமயம் ஆடல், பாடல் ஒலிகளை
அமுக்கிக் கொண்டு, 'நமசிவாய'
மந்திரத்தின் ஒலி கேட்கிறதே! ஏன்?
அதோ சம்பந்தரின் தேவாரத்தையே
யாரோ இனிய குரலில் அருமை
யாகப் பாடுகிறார்களே? இசைக்கும்
கலைக்கும் என்றே இறைவன்
பணித்த ஊர் இந்தத் திருவையாறு
போலும். இந்த ஊரில் கட்டாயம் ஒரு
நாள் தங்கிப் பார்த்து விட்டுத்தான்
போகவேண்டும்.

தஞ்சாவூருக்கு அவசரமாகப்
போய்த்தான் என்ன பயன்?
கோட்டைக்குள் பிரவேசிக்க
முடிகிறதோ என்னமோ? அப்படிப்
பிரவேசித்தாலும் மகாராஜாவின்
பேட்டி கிடைக்குமா? மகாராஜா
வைத்தான் இரண்டு பழுவேட்டரை
யர்களுமாகச் சேர்ந்து சிறையில்
வைத்திருப்பது போல் வைத்திருக்
கிறார்களாமே? காவேரியின் வடக
ரைக்குப் போக வேண்டியது தான்.

இந்த முடிவுக்கு வந்தியத்தேவன்
வந்துவிட்ட தருணத்தில் ஒரு சம்ப
வம் நடந்தது. மேற்குத் திசையிலி
ருந்து காவேரிக் கரையோடு ஒரு
பல்லக்கு வந்தது. பல்லக்குக்கு
முன்னாலும் பின்னாலும் சில காவல்
வீரர்களும் வந்தார்கள். வந்தியத்
தேவனுக்கு ஏதோ ஒரு சந்தேகம்
தோன்றியது.

பல்லக்கு அருகில் வருகிற வரை
யில் அங்கேயே நின்று காத்துக்
கொண்டிருந்தான்' அவன் நினைத்
தபடியே இருந்தது. பல்லக்கை மூடி
யிருந்த வெளித்திரையில் பனை
மரத்தின் இலச்சினைச் சித்திரம்
காணப்பட்டது. ஆஹா! கடம்பூரி
லிருந்து வருகிற பல்லக்குத்தான்
இது. நாம் குடந்தை வழியாக வர,
இவர்கள் வேறொரு வழியில் வந்தி
ருக்கிறார்கள். ஆனால் பழுவேட்
டரையரைக் காணோம். அவர்
வேறு எங்கேயாவது வழியில்
தங்கிவிட்டார் போலும்.

பல்லக்கு தஞ்சாவூர் இருந்த
தென்திசை நோக்கித் திரும்பியது.
அவ்வளவுதான், வந்தியத்தேவன்
திருவையாற்றில் தங்கும் எண்
ணத்தை விட்டு விட்டான். அந்தப்
பல்லக்கைப் பின் தொடர்ந்து செல்
லத் தீர்மானித்தான். என்ன நோக்
கத்துடன் அப்படித் தீர்மானித்தான்
என்றால், அது அச்சமயம் அவ
னுக்கே தெரிந்திருக்கவில்லை.

பல்லக்கில் வீற்றிருப்பது மது
ராந்தகத் தேவர் என்று மட்டும்
அவனுக்கு நிச்சயமாய்த் தெரிந்தது.
அவர் மேல் ஏற்பட்டிருந்த அருவ
ருப்பு மேலும் சிறிது வளர்ந்தது.
ஆனாலும் பல்லக்கைத் தொடர்ந்து
கொஞ்சம் போனால், ஏதாவது ஒரு
நல்ல சந்தர்ப்பம் ஏற்படலாம்.

பல்லக்கை சுமப்பவர்கள் அதைக்
கீழே வைக்கலாம் ஏதேனும் ஒரு
காரணத்துக்காக இளவரசர் மது
ராந்தகர் வெளிப்பட்டு வரலாம்.
அச்சமயம் அவருடன் பழக்கம்
செய்து கொள்ளலாம்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### குதிரைக்கு தோஷம்

(நேற்றைய தொடர்ச்சி)

அந்தப் பண்டாரம்
அவர்களைச் சரி
யான இளிச்சவாயர்
கள் என்று முடிவு
கட்டிக் கொண்டு, சாமர்
த்தியமாக பணத்தை
முன்னதாகவே வாங்
கிக் கொண்டான்.

பிறகு அவர்கள்
காணும்படியாக, பல
விதமான, சடங்கு
களை அப்படி இப்
படி என்று செய்தான்.
பச்சை இலைகளைப்
பறித்து வந்து
ஏதேதோ சொல்லி
முணுமுணுத்துக்
கொண்டு குதிரை
யைச் சுற்றிச் சுற்றி
வீசியெறிந்தான்.

அவர்களுக்கு அர்
த்தம் விளங்காத வார்
த்தைகளாக, ஆ,ஈ,ஊ,
ஔ,சௌ என்று உச்
சரித்துப் பலமுறை அந்
தக் குதிரையை வலம்
வந்தான்.

கையிலே பச்சிலை
களையும் சாம்பலை
யும் வைத்துக் கொண்டு
அந்தக் குதிரையின்
உச்சந் தலையிலிருந்து
வால் வரை, மேலாகத்
தடவியும் தூவியும்
பலமுறை தட்டியும்
விழித்தும் முறைத்தும்
பல திசைகளிலும் பற்
களைக் கடித்துக்
கொண்டு பார்த்தான்.

ஏற்கனவே அந்தக்
குதிரைக்கு ஒரு காது
மூளியாக இருந்தது.
பண்டாரம் அடுத்த
காதைத் திருகி மேலே
தூக்கிப் பிடித்து "இந்
தக் காதில் தான் குதி
ரைக்குத் தோஷம் எல்
லாம் தங்கித் தேங்கி
யிருக்கிறது.

இந்தக் காதை அறு
த்து எறிந்து விட்டால்
தோஷம் வெறுத்து ஓடிப்
போய்விடும். முன்பு
இதே குதிரை க்குத்
தோஷம் அந்தக் காதில்
தங்கியிருந்திருக்கிறது.

ஆகவேதான் அதை
அறுத்து எறிந்திருக்
கிறார்கள். அதுபோ
லவே இந்தக் காதை
யும் இப்போது அறு
த்து வீசி விட்டு தோஷ
த்தை ஓட்ட வேண்
டும்" என்று கூறிய
வாறே? எஞ்சியிருந்த
அந்தக் காதையும் அறு
த்து விட்டான் பண்
டாரம்.

அறுந்த காதை எடுத்
துக் கொண்டு தொலை
வாகப் போய் ஆழமான
ஒரு குழி வெட்டி, அதில்
போட்டு மண்மூடிப்
புதைத்து அடையாளக்
குறி செய்து விட்டுத்
திரும்பிப் பார்க்கா
மல் திரும்பி வந்து
விட்டார்கள்.

அன்றையப் பொழுது,
தோஷம் நிவர்த்திச்
சடங்குக்கே சரி
யாகிவிட்டது. மறு
நாள் தான் அவர்கள்
தங்கள் மடத்துக்கப்
போனார்கள்.

#### குதிரைக்கு லாயம்

இலவசமாகக் கிடை
த்த குதிரையினால்
ஏராளமாக கஷ்டங்
கள் ஏற்பட்டுப்
போனதை எண்ணி
எண்ணி வேதனைப்
பட்டார் பரமார்த்த
குரு. தமக்குக் குதிரை
வேண்டும் என்பதற்
காக அல்லவா தங்க
மான சிஷ்யர்களும்
துன்பப்பட வேண்
டியதாகி விட்டது.
என்று மிகவும் துக்
கப்பட்டார் குரு.

அவலட்சணமான
குதிரைதான் என்றா
லும் பணச் செலவு
ஏதும் இல்லாமல்
கிடைத்ததே என்று
பார்த்தால் அடுத்த
டுத்து வீண் செலவு
க்கு வழி செய்கிறதே
என்று வெகுவாக அங்
கலாய்த்துக் கொண்
டார் அவர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும்.
– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# விடுவிக்கப்பட்ட நிலங்களை பயனுடையதாக ஆக்குங்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில் 109 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்குச் சொந்தமான ஏகப்பட்ட நிலங்கள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில், நில விடுவிப்பைச் செய்யுமாறு தமிழ் மக்கள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் வலி.வடக்கில் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டிருந்த 109 ஏக்கர் நிலம் காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்ட 109 ஏக்கர் நிலத்தையும் உடனடியாகத் துப்புரவு செய்து அந்த நிலத்தை உச்சப் பயன்பாடுடையதாக காணி உரிமையாளர்கள் ஆக்க வேண்டும்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட நிலங்களை உச்சப் பயன்பாடுடையதாக ஆக்குவதன் மூலம், இராணுவத்தால் கபளீகரம் செய்யப்பட்டுள்ள ஏனைய நிலங்களையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கும்போது, அதற்குள் இருக்கக் கூடிய நியாயப்பாடு ஏற்றுக்கொள்ளப்படும்.

தவிர, மீள்குடியமர்வு இடம்பெறுகின்ற பிரதேசங்களில் காணி நிலம் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் தங்களுக்குச் சொந்தமான நிலங்களைத் துப்புரவு செய்யாமல் காடுபத்த விட்டுள்ளனர்.

இதன்காரணமாக அந்தப் பகுதியில் மீளக் குடியேறிய மக்கள் மிகப்பெரும் அசௌகரியங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

எனவே வசதி வாய்ப்பான இடங்களில் தாம் குடியிருந்து கொண்டு, தங்களுக்கு வேறு இடங்களில் இருக்கக்கூடிய காணிகளைப் பராமரிக்காமல் விடுவதென்பது அந்த ஊரில் வாழுகின்ற மக்களுக்குச் செய்கின்ற அநியாயமாகும்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் காணிகளை எல்லையிட்டு அறிக்கைப்படுத்தி, அவற்றைத் துப்புரவு செய்து குறித்த நிலங்களில் எத்தகைய பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள முடியுமோ அவற்றைச் செய்ய வேண்டும்.

அப்போதுதான் மீள்குடியமர்வு நடந்த பிரதேசங்களில் குடியிருக்கும் மக்கள் அச்சமற்ற நிலையில் வாழ முடியும்.

ஆகையால் தத்தம் காணிகளைத் துப்புரவு செய்து அங்கு வாழுகின்ற மக்களுக்கு உதவுகின்ற பணியை ஒவ்வொரு நில உரிமையாளர்களும் செய்தாக வேண்டும்.

இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அமைப்புகள் மிகுந்த கருசனை எடுத்து, குறித்த காணிகளைத் தூய்மைப்படுத்தி அதனை பயனுறுதிமிக்கதாக ஆக்க முன்வர வேண்டும்.

இதுவே இன்றைய உடனடித் தேவையாகும்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபாய் செலவாகும்

## தேர்தல்கள் ஆணைக்குழு மதிப்பீடு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தல் வாக்கெடுப்புக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு திறை சேரியிடம் 770 மில்லியன் ரூபாயை கோரியுள்ளது. உள்ளூராட்சி மன்ற தேர்தல் வாக்கெடுப்புக்கு மொத்தமாக 10 பில்லியன் ரூபாய் செலவாகும் என தேர்தல்கள் ஆணைக்குழு மதிப்பீடு செய்துள்ளது.

339 உள்ளூர் அதிகார சபைகளுக்கான வாக்கெடுப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. தபால் மூல வாக்கெடுப்பு 22, 23 மற்றும் 24 ஆகிய தினங்களில் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு திறைசேரி 37 மில்லியன் ரூபாயை ஏற்கெனவே ஒதுக்கியுள்ள நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆணைக்குழு 770 மில்லியன் ரூபாயை திறைசேரியிடம் கோரியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்கு 10 பில்லியன் ரூபாய் செலவாகும் என தேர்தல்கள் ஆணைக்குழு மதிப்பீடு செய்துள்ளது. தேர்தல் செலவுகளை இயலுமான அளவு மட்டுப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாக அறிய முடிகிறது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு நிதி ஒதுக்குவது சிக்கலானது என ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். அரச செலவுகளுக்குத் தேவையான ஒரு மாத நிதியைத் திரட்டிக் கொள்வது கடினமாக உள்ள நிலையில், தேர்தலுக்காக பாரிய நிதியை ஒதுக்கினால் பொருளாதார நெருக்கடி தீவிரமடையும் என அரசாங்கத்தின் முக்கிய தரப்பினர் குறிப்பிடுகின்றனர். (ம-7)

# மகன் முதலாளியின் மனைவியுடன் தொடர்பு

## தாயை கடத்தி படுகொலை

(கொழும்பு)

பெண்ணொருவர் படுகொலைச் செய்யப்பட்டு, அவருடைய சடலம் எம்பிலிப்பிட்டிய ஆயுர்வேத வைத்திய சாலைக்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

எம்பிலிப்பிட்டியவைச்சேர்ந்த வர்த்தகர் ஒருவர் உட்பட மூவர், சூரியவெவவை வசிப்பிடமாகக் கொண்ட 58 வயதான பெண்ணொருவரை கடத்திச் சென்று இவ்வாறு படுகொலைச் செய்துள்ளனர் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் மகனுக்கும் ஹோட்டல் உரிமையாளரின் மனைவிக்கும் இடையில் கள்ளத்தொடர்பு இருந்துள்ளது. இதுவே, இந்த படுகொலைக்கு காரணமென கண்டறியப்பட்டுள்ளது.

அவ்விருவரும் தப்பிச் சென்றுவிட்டனர். இந் நிலையிலேயே அவருடைய தாய் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய மூவரும் பிரதேசத்தில் இருந்து தலைமறைவாகிவிட்டனர் என்று தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (ம-7)

## விசேட பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஈவினை கற்பக விநாயகர் ஆலயத்தின் திருப்பணி அமைத்தல் தொடர்பிலான விசேட பொதுக்கூட்டமானது எதிர்வரும் 19.02.2023 அன்று காலை 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-7)

# தேர்தல் செலவுகளுக்காக பெப்ரவரி மாதம் மட்டும்

## 77 கோடி ரூபாயை கோரிய தேர்தல் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான பணிகளுக்காக பெப்ரவரி மாதத்திற்கு மாத்திரம் 77 கோடி ரூபாயை வழங்குமாறு நிதி அமைச்சிடம் தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

நிதியமைச்சின் செயலாளரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அத்துடன், தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணி நாளை ஆரம்பிக்கப்படும் என அரசாங்க அச்சகமா அதிபர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

வாக்குப்பதிவு தொடர்பான வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கும் பணி இதுவரை தொடங்கப்படவில்லை என்றும் அது தொடர்பான சரிபார்ப்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## பழுது பார்க்கும் போர்வையில்

# ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணம் கொள்ளை

(குருநாகல்)

குருநாகல் - கட்டுவன பிரதேசத்தில் உள்ள அரச வங்கி ஒன்றின் ஏ.ரி.எம் இயந்திரத்தில் இருந்து இனந்தெரியாத சிலரால் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வங்கியின் ஏ.ரி.எம் இயந்திரத்தை பழுது பார்ப்பது போன்று நடித்து குறித்த சந்தேகநபர்கள் பணத்தை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட பணத்தின் பெறுமதி கணக்கிடப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

# இலங்கையை சேர்ந்த கோடீஸ்வரர் ஓனேஷ் சுபசிங்க

## சடலமாக மீட்பு

(கொழும்பு)

இலங்கையின் ஒபெக்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும், பிரபலமான தொழிலதிபருமான ஓனேஷ் சுபசிங்க (வயது 45) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் நேற்றையதினம் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தொழிலதிபர் ஓனேஷ் சுபசிங்க மற்றும் அவரது குடும்பத்தினர் ஜகார்த்தாவுக்கு சுற்றுலா சென்றுள்ளநிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்திற்கான காரணம் வெளிவராத நிலையில் இது தொடர்பான மேலதிகவிசாரணைகளை ஜகார்த்தாவின் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## லாஃப்ஸ் நிறுவனமும்

# எரிவாயு விலையை திருத்துவதில் அவதானம்

(கொழும்பு)

லாஃப்ஸ் எரிவாயு நிறுவனமும் எரிவாயு விலையை திருத்துவதில் அவதானம் செலுத்தியுள்ளது.

இன்று காலை இடம்பெறும் கலந்துரையாடலின் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது 12.5 கிலோகிராம் எடை கொண்ட உள்நாட்டு சமையல் எரிவாயு கொள்கலன் விலை 5,080 ரூபாயாகும்.

இதேவேளை, லிட்ரோ நிறுவனம் தமது எரிவாயு விலையில் திருத்தம் மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(சிலாபம்)

சுற்றுலாப்பயணம்சென்றபோது சிலாபம் கடல் பகுதியில் நீராடிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் 35 வயதான தந்தை, 7 வயதான மகள் மற்றும் 6 வயதான அவர்களின் உறவினரின் மகன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகேந்திரபுரம் சிறுகடல் பகுதிக்கான பாதையைப் புனரமைத்து தாருங்கள்

## அப்பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி புளியம்பொக்கணை, நாகேந்திரபுரம் சிறு கடல் பகுதிக்கான பாதை சீரின்மையால் பருவ கால தொழிலை மேற்கொண்டு வரும் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புளியம்பொக்கணை, நாகேந்திரபுரம் ஆகிய சிறுகடற் பகுதிகளில் தற்போது பருவகால இறால் தொழில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயில் சந்தியிலிருந்து கடற்கரை வரைக்குமானசுமார்மூன்று கிலோ மீற்றர் வரையான வீதி இது வரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதுடன் சாதாரண துவிச்சக்கரவண்டிகளில் கூட பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

இவ்வாறு குறித்த வீதி சேதமடைந்து சேறும் சகதியுமாக காணப்படுவதனால் அன்றாடம் தொழிலுக்கு செல்லும் சிறு கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த வீதியை புனரமைத்து தருமாறு தொடர்ச்சியாக 10 வருடங்களுக்கு மேலாக கோரிய போதும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இது குறித்து உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-315)

# எழுச்சிப் பேரணியை வலுச்சேர்க்க வவுனியாவிலும் பேரணி



(நெளுக்குளம்)

அரசாங்கத்தின் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகள், ஆக் கிரமிப்புக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கில் இருந்து கிழக்கு வரையான பேரணிக்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் நேற்று பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்பு பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். (4-6-299)

# 80 போத்தல் கசிப்புடன் இருவர் பொலிஸாரால் கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெத்தலியாறு பகுதியில் 80 போத்தல் கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை வீதி பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய 80 போத்தல் கசிப்பினை புதுக்குடியிருப்பு நோக்கி கொண்டு செல்ல பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் இரண்டு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து கசிப்பினை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளதுடன் குறித்த இருவரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்தார்.(4-6-316)




இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக தெரிவித்து இலங்கை அரசுக்கு எதிராக லண்டனில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# மணல் ஏலவிற்பனை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற வளாகத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு மணல் ஏல விற்பனை மேற்கொள்ளப்படவுள்ளதாக நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட குறித்த மணலை ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர் பார்வையிட முடியும் என்றும் பதிவாளர் தெரிவித்துள்ளார்.(4-6-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 120 | 300 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 120 | 160 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 300 | 400 |
| தக்காளி | 300 | 280 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| கோவா | 80 | 60 | 80 | 100 |
| கரட் | 200 | 250 | 240 | 320 |
| பூசணி | 100 | 100 | 80 | 100 |
| புடோல் | 200 | 160 | 150 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 500 | 420 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 200 |
| பாகற்காய் | 240 | 250 | 280 | 400 |
| வெண்டிக்காய் | 250 | 300 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 600 | 500 |
| லீக்ஸ் | 320 | 300 | 300 | 320 |
| பீற்றூட் | 160 | 250 | 250 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1800 | 1400 | 1000 | 2000 |
| போஞ்சி | 350 | 300 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 100 | 100 | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 80 |
| தேசிக்காய் | 80 | 70 | 80 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 300 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 250 | 150 | 240 | 250 |
| முள்ளங்கி | 60 | 60 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 40 | 40 | 80 |
| ஈரப்பலா | 100 | 160 | 140 | 120 |

# பெலாரஸ் நாட்டில் உயர் கல்விக்கு வாய்ப்பு

(கொழும்பு)

இந்தியாவின் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பெலாரஸ் நாட்டின் தூதுவர் இலங்கைக்கும் வருகை தந்துள்ளார்.

இந்த நிலையில், கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும் பெலாரஸ் தூதுவருக்கும் இடையில் கல்வியமைச்சில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் உயர்கல்வி மேம்பாட்டுக்காக, பெலாரஸில் உயர்க் கல்வி வாய்ப்புக்களை வழங்குவது குறித்தும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

பெலாரஸ் நாட்டின் உயர் கல்வி வாய்ப்புகளுக்காகவும் பெலரஸ் அரசாங்கத்தின், இலங்கைக்கான ஆதரவிற்காகவும் பெலாரஸ் தூதுவருக்கு சுசில் பிரேமஜயந்த இதன்போது நன்றி தெரிவித்தார். (4)

# கொழும்பில் கடத்தப்பட்டு இளைஞர் கொலை

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தை அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 24 வயதுடைய இளைஞனை வேனில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு கடுமை யாகத் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக தெமட்ட கொட பொலிஸார் தெரிவித்தனர்.

தெமட்டகொட லக் ஹிரு செவன அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் இளைஞனை விசாரணைக்குட்படுத்த விரும்புவதாகக் கூறி, ஒரு குழுவினர் கடத்தியதாக தமக்கு தகவல் கிடைத்ததாக பொலி ஸார் தெரிவித்தனர்.

கடத்தப்பட்ட இளைஞன் கடுமையாகத் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு, அவர் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்பு க்கு முன்பாக விடப்பட்டுள்ளார். அதன் பின்னர், கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இந்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் தெமட்டகொட பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

# விபத்து; ஒருவர் பலி

(கொழும்பு)

பிலியந்தலயில் சிவில் பொறியியலாளர் ஒருவர் செலுத்திய கெப் வண்டியொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் பிலியந்தல - ஜாலியகொட, கஸ்பேவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

காளியம்மஹர பிரதேசத்தில் வசிக்கும் 56 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபரின் தலையில் பலத்த காயங்கள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய சிவில் பொறியியலாளர் கெஸ்பேவ நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பிலியந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிவாயு விலை...

டரின் விலை 334 ரூபாயினாலும் 05 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 134 ரூபாயினாலும் அதிகரித்துள்ளது.

இன்றிலிருந்து 12.5 கிலோ எரிவாயு சிலிண்டர் 4,743 ரூபாய்க்கும் 5 கிலோ எரிவாயு சிலிண்டர் 1,904 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும்.

இதேவேளை 2.3 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 61 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 822 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது. (ம-7)

## அடிமைத்தனத்...

பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கம் தவறான கொள்கைகளைப் பின்பற்றி நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிப்பதாகவும்,

இவர்களின் இத்தகைய செயற்பாடுகளினால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ராஜபக்ஷ குடும்பம் இந்நாட்டை அழித்து வறிய நிலைக்கு இட்டுச் சென்றதாகவும், சிறு குழந்தை முதல் முதியவர் வரை, அரச ஊழியர் முதல் கூலித் தொழிலாளி வரை அனைவரினதும் இயல்பு வாழ்க்கை வீழ்ந்துள்ளதாகவும்,

இந்நாட்டின் 220 இலட்சம் மக்கள் இனி எந்த ஆட்சியாளருக்கும் தலைவருக்கும் அரசியல்வாதிகளுக்கும் அடிமைகள் அல்ல எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ராஜபக்ஷவின் அடிமைத்தனத்தை இன்னமும் உறுதிப்படுத்தும் மொட்டு யானை அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான முதல் நடவடிக்கை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர் ஆரம்பிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

உலகில் எந்த நாடும் பொருளாதாரத்தை சுருக்கி பிரச்சினைகளைத் தீர்த்ததாக இல்லை எனவும், தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தை சுருக்கி நாட்டு மக்களை அழிக்க முயல்வதாகவும், தேவையை குறைப்பதன் மூலம் நாட்டின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று நினைக்கிறார்கள் என்றாலும், அது தவறு எனவும், இந்த பொருளாதார மற்றும் சமூக வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதே ஒரே தீர்வு எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## எழுச்சிப் பேரணி...

னர்.

தொடர்ந்து விசுவமடுப்பகுதியில் பெருமளவான மக்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டிகளுடன் கலந்து ஆதரவளித்தனர்.

தொடர்ந்து தொடர் பேரணியாக சென்ற மக்கள் தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து உறுதிமொழி பெற்று மக்கள் திரளான ஆதரவுடன் முல்லைத்தீவு நோக்கிய பயணம் இடம்பெற்றது. (ம-7,100)

## தாவடியில்...

கொக்குவில் நோக்கி 3 மோட்டார் சைக்கிள்கள் மிகை வேகத்தில் பயணித்ததாகவும் அதில் 2ஆவதாக வந்த மோட்டார் சைக்கிள் யாழ்ப்பாணத்திலிருந்து மருனார்மடம் நோக்கி பயணித்த ஹயஸ் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதில் யாழ்.ஓட்டுமடம் பகுதியை சேர்ந்த அனுஜன் (வயது-19) என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார்.

ஜெயசீலன் ரகுசான் (வயது - 17) என்ற இளைஞன் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,104)

## கடும் நெருக்...

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், பொதுமக்களின் செலவினங்களுக்குத் தேவையான பணத்தை வழங்குவதற்கு நிதி அமைச்சின் அதிகாரிகள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

ஏனைய அனைத்து அமைச்சுக்களின் செலவுகளை நிர்வகிப்பதுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் மூலம் செலவுகளை நிர்வகிப்பது தொடர்பாக சில தரப்பினர் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (ம-7)

## உலகப் பெருமஞ்...

வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூச திருநாளான நேற்று இரவு உலகப் பெருமஞ்சத் திருவிழா பக்திபூர்வமாக இடம்பெற்றது.

தவில், நாதஸ்வர கலைஞர்கள் மங்கள வாத்தியம் இசைக்க, தமிழ்ப் பாரம்பரியங்களை கலைஞர்கள் வெளிப்படுத்த கந்தசுவாமியின் திருமஞ்சம் அழகுற பவனி வந்தது.

முருகப்பெருமான் வள்ளி, தெய்வானையுடன் மஞ்சத்தில் எழுந்தருள இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டுவந்துவடம் பிடித்து இழுத்து வழிபட்டிருந்தனர். (ம-7,33)

## இந்தி...

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுச் சந்தித்தார்.

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தியாவினால் வழங்கப்பட்ட 50 பேருந்துகளை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே மேற்படி சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் பொருளாதார மீட்சிக்காக இந்தியா இலங்கைக்கு வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் கிராமபுற அபிவிருத்திக்காகவும் இந்தியா வழங்கும் ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கது என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்தார். (ம-7)

## தேர்தலுக்கான...

தற்போது சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் நிலவும் நிதி நெருக்கடி, இதில் பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளதாக குறித்த சிரேஷ்ட பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேவைக்கேற்றவாறு நிதியை விடுவிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்கவிடம் வினவியபோது, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது அரசியலமைப்பினூடாக உறுதிப்படுத்தப்பட்ட கடமை என்பதால், பகுதி பகுதியாகவேனும் நிதி வழங்கப்படுமென நிதி அமைச்சு ஏற்கெனவே தெரிவித்துள்ளதாக கூறினார்.

அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படுமென தாம் நம்புவதாகவும் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1477
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 0 2 9 1 3 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1052
Q 16 22 53 66
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.05
சீட்டிழுப்பு இலக்கம் 3264
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
U 01 12 46 77
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 05/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1370
வெற்றி எழுத்து
சுப்பர் இலக்கம்
வெற்றி இலக்கங்கள்
R 10 11 53 56 70

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.05
சீட்டிழுப்பு இலக்கம் 331
வெற்றி இலக்கங்கள்
துலாம் 08 49 54 59 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/05
சீட்டிழுப்பு இலக்கம் 5022
ஆங்கில எழுத்து
வெல்லப்பட்ட இலக்கங்கள்
V 0 5 4 2 7 1
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1997
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.05
தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
O 40 56 66 76
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 2,392,060/-
DLB

சனிதா Shanida
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.05
சீட்டிழுப்பு இல : 4158
வர்ணம் : இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 2,240,300/-
வெற்றி இலக்கங்கள்
06 21 55 58
ஆங்கில எழுத்து E
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 284
சீட்டிழுப்பு திகதி 2023.02.05
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
19 26 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,816,860/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட்
ரூ. 2,153,892/-
திகதி 2023-02-05
வெற்றி வாரம் 3709
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள்
21 24 30 41
ரூ.500/- பரிசுகளுக்கான 6497
ரூ.100/- பரிசுகளுக்கான 880
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 7,575,032/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 01 09 34 52 65
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1173
வர்ணம் மஞ்சள்
திகதி 2023.02.05
ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 303,477,696.20
DLB
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1823
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.05
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 2,493,140/-
வெற்றி இலக்கங்கள்
18 33 55 57
ஆங்கில எழுத்து P
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமையல் வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது சைவ உண வகத்திற்கு வேலையாட்கள் தேவை. தங்கு மிடம், உணவு இலவசமாக செய்து தரப்படும்.

சம்பளம் :- 45,000/= க்கும் மேல்

தொடர்பு :- 076 992 6401

(C-5898)



## பதவி வெற்றிடம்

### பாதுகாப்பு உத்தியோகத்தர்

ஆண்கள் (இரவுக்கடமை) தகுதியும் உடல்ஆரோக்கியமும் விருப்பமும் உள்ளவர்கள்

076 097 3127

என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

குறிப்பு (யாழ்ப்பாண நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

(இ)


# அடிப்படை தேவைகளைக் கூட மக்களால் பூர்த்திசெய்ய முடியவில்லை - பொன்சேகா

(கொழும்பு)

நாடு பாரியபொருளாதார நெருக் கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் பொது மக்கள் தமது அன்றாட அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வ தில் பல்வேறு சிக்கல்களுக்கு முகங் கொடுத்துள்ளனர்.

அவ்வாறிருக்கையில் சுதந்திர தின நிகழ்வுகளுக்காக அரசாங்கம் 200 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

இந்த நிதியை நாடளாவிய ரீதியில் மருந்து தட்டுப்பாடு நிலவும் வைத்திய சாலைகளுக்கு மருந்து கொள்வனவுக் காக பயன்படுத்தி இருக்கலாம். தற்போது உள்ள ஆட்சியாளர்களிடம் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் எந்தவொரு ஸ்திரமான கொள்கைகளும் இல்லை என்று எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்டத்திற்கான தேர்தல் பிரசார கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் பாணந்துறையில் நடை பெற்றது.

இதன்போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறு கையில்,

நாங்கள் ஒவ்வொரு கூட்டங் களுக்கு செல்லும் போதும் மக்கள் தாம் முகங்கொடுக்கும் பிரச்சினை களை மறைத்து எமது முகங் களை பார்த்து புன்னகை செய்வ தற்கு முயற்சிக்கிறார்கள்.

இருப்பினும் அவர்கள் பொருளா தார நெருக்கடிகள் மூலம் ஏற்பட் டுள்ள சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் அவதியுறுகிறார்கள் என்பது அவர்களின் முகங்களை பார்க்கும் போது எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

மேலும் அவர்களை போலவே நாமும் நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்திருக்கிறோம். இந்த பிரசார கூட்டத்திற்கு வருகை தந்து மீள வீட்டிற்கு செல்வதற்கு எனது வாக னத்திற்கு 10,000 ரூபாயிற்கு டீசல் நிரப்ப வேண்டியுள்ளது. முன்னர் வாகனத்திற்கு 1,000 ரூபாயிற்கு டீசல் நிரப்பினால் அம்பாந்தோட் டைக்கே சென்று வரலாம்.

பொதுமக்கள் தமது அன்றாட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் பல்வேறு சிக் கல்களுக்கு முகங்கொடுத் துள்ள னர்.

அவ்வாறிருக்கையில் சுதந்திர தின நிகழ்வுகளுக்காக அரசாங் கம் 200 மில்லியன் ரூபாயை செலவிட்டுள்ளது.

இந்நிலையில் நாடு எதிர்கொண் டிருக்கும் பொருளாதார நெருக்கடி யில் மக்கள் உண்மையான சுதந் திரத்தை அனுபவிக்கின்றனரா?

தற்பொழுது உள்ள ஆட்சியாளர் களிடம் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் எந்தவொரு முறை யான நோக்கங்களும் திட்டங் களும் கிடையாது.

எதிர்காலம் தொடர்பில் நீண்ட தொரு ஸ்திரமான குறிக்கோள் களும் கிடையாது ஆனால் அவர் கள் அன்றும் இன்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்களுக்கு தற்காலிகமாக தீர்வு பெற்றுக் கொடுக் கும் செயல் முறையிலேயே ஈடுபட் டுள்ளார்கள் என்றார். (ம-7)


After A/L... JOB? Apply Now

INNERCIRCLE (PVT) LTD

(Authorized Business Partner with Dialog)

Smart loyalty

உங்கள் திறமைக்கு இதோ எங்களிடம் ஓர் அரிய வாய்ப்பு

நேர்காணலின் பின் முதல் விண்ணப்பதாரர்கள் 100 பேருக்கு நிரந்தர தொழில்வாய்ப்பு



Our Opportunities:-

- உங்கள் துறையினை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. youcan Choose your Division
- இலவச பயிற்சியுடனான தொழில்வாய்ப்பு Career Opportunity with free Training
- Attractive Salary with Handsome Allowenses

40,000 EPF + ETF

More Details Send Your Name & Address by Whatsapp

JAFFNA / VAVUNIYA / HATTON / COLOMBO / BANDARAWALA T.P :077 782 4807

(14514)



பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -35,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.

0777-068-777

(C-5910)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளி நொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சுங்கானை வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14490)

076 825 7716 (ஆகாஸ்)


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை பாலசுப்ரமணியம்

(ஓய்வு பெற்ற வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் இலங்கை வங்கி, நகரசபை உறுப்பினர் - பருத்தித்துறை)



தோற்றம்
21 . 03 . 1946

மறைவு
04 . 02 . 2023

நீர்கொழும்பைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசுப்ரமணியம் அவர்கள் கடந்த 04.02.2023 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - பகவதி அம்மாள் தம்பதியரின் செல்வப் புதல்வனும் காலஞ்சென்ற லோகநாயகியின் அன்புக் கணவரும் முரளீதரன், ஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிசாந்தினி, மைதிலி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லோகாஜினி, அக்ஷயா, சத்தியன், கோபிகா (லண்டன்), ஜனகன் (லண்டன்) ஆகியோரின் பேரனும் வசந்தகுமாரியின் (கொழும்பு) அன்புச் சகோதரனும், இமானுவேல் ஜேம்ஸ் (கொழும்பு) அவர்களின் மைத்துனரும், செகதீஸ்வரனின் (லண்டன்) சகலனும், செல்வநாயகியின் (லண்டன்) மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செட்டித்தெரு, பருத்தித்துறையிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (07.02.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.இ. 077 548 7200

தகவல் - மகன் முரளீதரன் குடும்பத்தினர்

(C-5908)

# மரண அறிவித்தல்

## திருமதி ரேணுகா குபேரநாதன்

(இளைப்பாறிய உப அதிபர், இனுவில் மத்திய கல்லூரி)



தோற்றம்
24 . 12 . 1956

மறைவு
04 . 02 . 2023

இளவாலை முள்ளானையைப் பிறப்பிடமாகவும் இனுவில் கிழக்கு, கொழும்பு, மாவிட்டபுரம் வடக்கு என்பனவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரேணுகா குபேரநாதன் அவர்கள் 04.02.2023 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீசுப்பிரமணியம் (முன்னாள் புகையிரத அதிபர்) - கமலாம்பிகை (முன்னாள் ஆசிரியை) தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ் சென்ற சி.செல்லத்துரை (முன்னாள் புகையிரத இயக்குநர்) - மீனாட்சி தம்பதியினரின் மருமகளும், திரு.செ.குபேரநாதன் (இளைப்பாறிய உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும், கு.அர்ஷன் (லம்போதரன்-இனுவில் மத்திய கல்லூரி மழைய மாணவன்) அவர்களின் அன்புத் தாயாரும், திருமதி பேரின்பநாயகி பாலேந்திரன் (முன்னாள் ஆசிரிய ஆலோசகர்), செ.சிவநாதன் (ஓய்வுபெற்ற புகையிரத இயக்குநர்), திருமதி மகேஸ்வரி தெய்வேந்திரகுமார் (ஜேர்மனி) செ.ரகுநாதன் (கனடா), திருமதி லோகேஸ்வரி சுபேந்திரன் (இளைப்பாறிய உப அதிபர் மகாஜனாக்கல்லூரி தெல்லிப்பளை) ஆகியோரின் மைத்துனி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2023) மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்காடு மாவிட்டபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடிவீதி, 2ஆம் ஒழுங்கை மாவிட்டபுரம் வடக்கு. தொலைபேசி இல :077 164 3162

தகவல் : செ.குபேரநாதன் (கணவர்) இளைப்பாறிய உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர்.

(14513)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.